# “அருட்பணி விரிவாக்கத் திட்டம்”



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்
## அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**ஐப்பசி மாத வெளியீடு (Nov 2015)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

காணிக்கை ரூ.10/-

**மானுடர்க்குள் எதன் பெயராலும், எவரையும், எதனையும் அடிமைப்படுத்தக் கூடாது.**

# உள்ளுறை


1. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டம்.

2. அருட்பணி விரிவாக்கத் திட்ட வரலாறும், செயல் நிலை விளக்கமும் - முன்னுரை.

3. பதினெண்சித்தர்களின் பார்வையில்:- பெரியாரும் - சங்கரரும்.

4. சிந்திக்க வாருங்கள்... - *[ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் எழுதிய "இளைஞர்களுக்கு" என்ற நூலில் ஒரு பகுதி].*

5. "இ.ம.இ. ஒரு பண்பாட்டு இயக்கமே" - இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளரின் வணக்கவுரை.

6. இராசி வட்டத் தீர்மானங்கள் (பன்னிரண்டு).

# இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டம்

பல நூறுயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே! இன்றைய மண்ணுலகப் பரப்புகளில் பல தோன்றும் முன்னரே! இமயமலையும், வடஇந்தியாவும் தோன்றுவதற்கு முன்னரே! விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன் அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் பெறுவதற்கு முன்னரே! இளமுறியாக் கண்டத்தில் [குமரிக் கண்டம்] பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களும் ஒன்று கூடி ஆய்வுகள் நிகழ்த்தி இம்மண்ணின் ஈசர்களுக்கு ('மணீசர்கள்' = 'மணிசர்கள்') ஏற்ப உருவாக்கிய மதமே 'இந்து மதம்'.

மணிசர்கள் அருள் அணுக்களைத் தங்களுக்குள் கருவாக்கி உருவாக்கிடும் பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகள் முறையாகவும் நிறையாகவும் வகுக்கப்பட்ட மதமே இந்து மதம். இம்மண்ணுலகோடு நிலையாக இந்துமதச் செயலகங்கள் என்றென்றும் இருக்கும் வண்ணமே ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், இருநூற்று நாற்பத்துமூன்று சத்தி பீடங்களும், நூற்றெட்டுத் திருப்பதிகளும், தொண்ணூற்ருறுவகை வழிபடு நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றின் திருவாக இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், தேவர், தேவதை, அமரர், இருடி, ... கணபாடிகள் எனப்படும் நாற்பத்தெட்டு வகையினர் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்திடும் வழிவகைகள் அனைத்தும் மிகமிகத் தெளிவாக வகுத்தளிக்கப் பட்டிருக்கின்றன பதினெண்சித்தர்களால்.

இன்றைய குருமகாசன்னிதானம், ஞானகுரு, ஞானத்தந்தை, இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் மக்களின் வாழ்வியல் கோளாறுகளான (1) கோள்கள், இராசிகள், மீன்கள் முதலியவைகளின் பாதிப்புகள்; (2) சாபம், கண்ணேறு ... முதலிய தொல்லைகள்; (3) செவ்வாய் தோசம், நாக தோசம், சென்மச்சனி ... முதலிய பாதிப்புகள் நலிவுறுத்தும் நோய்கள், (4) மனிதர்களைப் பிடித்தாட்டும் பேய், பிசாசு, ஆவிகள், ஊழ்வினை, விதி, மதி, மானுட முயற்சி ... முதலிய அனைத்தையும் செம்மைப் படுத்தி அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும் பணிகளை; தாம் உருவாக்கிய ஆயிரக்கணக்கான மாணுக்கர், மாணுக்கியர்கள் மூலமாகக் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ் ஆயகலைகள் அறுபத்து நான்கு, அருட்கலைகள் நாற்பத்தெட்டு, தெய்வீகக் கலைகள் ஒன்பது, பேய்க்கலைகள் ஒன்பது, நோய்க்கலைகள் ஒன்பது, தேய் கலைகள் ஒன்பது ... முதலிய கலை நிலைகள் கற்றுத் தரப் படுகின்றன. குண்டலினி உணரல், தன்னையறிதல், பழம்பிறப்பு உணரல், வாழ்க்கை நிலையறிதல், மந்திர எந்திர தாந்தரீகத் தகடு பெறல் முதலியவற்றிற்கும் அருள் வாய்ப்புண்டு. **இவற்றால் தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும், அரசியல் வாழ்வும்,... ஒழுங்குபட்டு, முழுமைப்பட்டு நிறைவடைந்திடும்.** எனவே, விருப்பாற்றலும், உழைப்பாற்றலும் உடைய பத்தர்கள் அனைவரும் வருக! வருக!! வருக!!!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட 'குருதேவர் அறிக்கை' என் 1.//**

# அருட்பணி விரிவாக்கத் திட்ட வரலாறும், செயல்நிலை விளக்கமும்

## முன்னுரை

**'குரு பாரம்பரியம்'** எனும் நூல், பதினெண்சித்தர்களால் **'மத வரலாருகத்'** (Religious History) தொடர்ந்து அருதிக் காலம் முதல் (அருதிக் காலம் என்பது கல் தோன்றி மண் தோன்ருக் காலம்) எழுதப் பட்டு வருகிறது. இதேபோல் இவர்கள் **'அரச பாரம்பரியம்'** என்ற பெயரால் **'அரசியல் வரலாறும்'** (Political History), **'இலக்கிய பாரம்பரியம்'** என்ற பெயரால் **'இலக்கிய வரலாறும்'** (History of language and literature) தொடர்ந்து எழுதி வருகிருர்கள்.

இவர்கள் **காலக் கணக்கீட்டு முறையில்தான்** (with a chrono-logical approach) எதையும் எழுதுகிருர்கள். இவர்களின் நோக்கும், போக்கும் முழுக்கப் பகுத்தறிவுப் பாங்கும் (with a rationalistic attitude), விஞ்ஞானச் சூழலும் (in a scientific atmosphere) உடையனவே.

இவர்களின் **கொள்கை** 'எதையும் அன்பு வழியில், அமைதி வழியில், அற வழியில், மென்மை வழியில், சமாதான வழியில், விட்டுக் கொடுத்துப் போகும் வழியில், நேர்மை வழியில், தூய்மை வழியில், வாய்மை வழியில் அடக்கமாகப் பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுத்துவதுதான்'.

இவர்களின் **குறிக்கோள்** 'மானுட நலம் பேணல்', 'மனித உரிமை காத்தல்', 'மனித உறவுமுறை வளர்த்தல்', 'மனித வாழ்வின்

கனிவு, நளினம், அழகு, விருப்பம், காதல், பற்று, பாசம், நட்பு, தோழமை... போற்றி வளர்த்தல்', 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்குதல்', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைத்தல்', '<u>இயற்கையாகக் கிடைப்பனவற்றையும், மனித முயற்சியாலும் உழைப்பாலும் விளைவனவற்றையும் **அனைவரும் சமமாகப் பகிர்ந்து உண்ணுதல்**</u>' ...... முதலியவையே.

இவற்றையெல்லாம் எளிமையாகவும், இயல்பாகவும் மானுடர் விரும்பியேற்றுச் செயல்படுத்த உருவாக்கப்பட்டதே இந்துமதம். இது விண்வெளியில் வாழும் பதினெண்சித்தர்களின் மதம். இம்மண்ணுலகம் தோன்றும் முன்னரே விண்வெளியில் வாழ்ந்து வரும் மதம். ஒவ்வோர் உலகமும் தோன்றியவுடன் பதினெண்சித்தர்கள் அங்குச் சென்று வாழ்ந்து; அந்தந்தப் பயிரினங்களும், உயிரினங்களும் தழைக்கத் <u>தங்களது மதமான **இந்துமத**த்தைத் தங்களின் தாய்மொழியான **தமிழில்** வழங்கிடுகிறுர்கள்</u>.

அருதிகாலக் கருவூரார் தமது குருபாரம்பரிய வாசகமாக இந்து மதம் பற்றியும், தமிழ்மொழி பற்றியும் இப்படிக் குறிப்பிடுகின்ருர். '**இந்து**' என்ற சொல்லுக்கு நாற்பத்தெட்டுச் சொற்களைப் பொருள் விளக்கச் சொற்களாகத் தருகின்ருர்.

"... **இந்து** = 1. விந்து, 2. உயிரணு, 3. உயிரின் கரு, 4. உயிரின் ஆரம்பமும் முடிவும், 5. இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) 6. ஆவி, ஆன்மா, உயிர், 7. ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை..., 8. அன்பு, 9. அமைதி, 10. அழகு, 11. அறம், 12. அருள், 13. அறிவு, 14. ஆர்வம், 15. ஆற்றல், 16. இன்பம், 17. இரக்கம், 18. இல்லறம், 19. இனிமை, 20. ஈகை, 21. உண்மை, 22. உறவு, 23. உய்வு, 24. உற்சாகம், 25. உழைப்பு, 26. ஊக்கம், 27. ஒண்மை, 28. ஒளி, 29. ஒலி, 30 பத்தி, 31. தவம், 32. தாய்மை, 33. தூய்மை, 34. துய்ப்பு, 35. கனிவு, 36. மேன்மை, 37. நிலைபேறு, 38. வாய்மை, 39.

நேர்மை, 40. கூர்மை, 41. பெரியது, 42. அரியது, 43. சீரியது, 44. நிறைவானது, 45. நன்மையானது, 46. பயன்மிக்கது, 47. விழிப்பானது, 48. செழிப்பானது... என்று அனாதிகாலக் கருவூரார் இந்து மதத்துக்குப் பொருளாக நாற்பத்தெட்டினைக் கூறிய போதும்; காலப்போக்கில் மண்ணின் ஈசர்களான [மண்ணின் தலைவர்கள்] மணீசர்கள் => 'மனிசர்கள்' அநுபவத்தால் நூற்றுக்கணக்கான பொருட்சொற்களை 'இந்து' என்ற சொல்லுக்கு உருவாக்கி விட்டனர்..." என்றிப்படிப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் [கி.மு.100 - கி.பி. 150] அவர்கள் தமது குருபாரம்பரியத்தில் குறிக்கிறார்.

இந்த அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் '**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**' பற்றிக் கூறும் குருபாரம்பரிய வாசகமே கண்டப்பக் கோட்டைச் சித்தர் கருவூரார் ஏளனம்பட்டியார் திரு உ. இராமசாமி [உருத்திரம் பிள்ளை மகன் இராமசாமி] அவர்களால் விரிவாக்கப்பட்டும், செயலாக்கப்பட்டும் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்', 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்', 'அருளுலக ஆர்வலர் கழகம்' என்று மூன்று பெரிய அமைப்புகளாக கி.பி. 1772இல் பிறப்பெடுத்தன.

"... அனாதிகாலக் கருவூராரால் இம்மண்ணுலகில் மணிசர்கள் தோன்றி விலங்கு நிலையில் வாழுவதை மாற்றிட; **இந்துமதம் அமுதத் தமிழில் மணிசர்களுக்கு வழங்கப் பட்டது**. அது, காலப்போக்கில் மணிசரின் கற்பனையாலும், கனவாலும், தன்னல வெறியாலும், சுரண்டல் போக்காலும், ஏமாற்று உணர்வாலும், நினைவாற்றல் குறைவாலும் .... இந்து மதம் பல தேக்கங்களையும், முடக்கங்களையும், இயலாமைகளையும் .... பெற்று விட்டது. அவற்றைப் போக்கிடவே ஆதிகாலக் கருவூரார் **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** [குறிப்பு:- இந்து *மத* மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிக்கவில்லை] தோற்றுவித்தார்.

அதற்காக '**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**' அமைத்து அருளை அநுபவப் பொருளாக வழங்கினார். அப்பணி உலகம் முழுவதுமுள்ள

மணிசர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக '**அருளுலக ஆர்வலர் கழகம்**' அமைத்தார்.

இன்றைக்குப் பல்வேறு மதங்களும், சாதிகளும், மொழிகளும் இந்துமதத்தை நலிவடையச் செய்வதால் இந்துமதத்தின் பெருமையுணர்த்த அருளுலகக் கருத்து வாசகங்கள் முழக்கப்படல் வேண்டும். இதற்காகப் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகங்கள் சில உடனடியாக ஓலைகளில் எழுதி வழங்கப் படுகின்றன."

**-- சித்தர் கண்டப்பக் கோட்டைக் கருவூரர்**
**சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை.**

**பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் [கி.பி.785 - கி.பி.1040] குருபாரம்பரிய வாசகம்**:

"... இந்துமதத்தை முழுமையாக அனைவரும் தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, உணர, நம்ப, ஒப்புக் கொள்ள, ஏற்று நடைமுறைப் படுத்த பதினெண்சித்தர் மரபுப்படிப் பதினெட்டு நூல்கள் வழங்கப் படுகின்றன. [*இப்பதினெட்டும் ஏற்கனவே இருந்திருக்க வேண்டும் என்றே கருத வேண்டியிருக்கிறது*.]

1. கருவாக்கு, 2. கருவாசகம், 3. குருவாக்கு, 4. குருவாசகம், 5. தருவாக்கு, 6. தருவாசகம், 7. திருவாக்கு, 8. திருவாசகம், 9. அருள்வாக்கு, 10. அருள்வாசகம், 11. மருள்வாக்கு, 12. மருள்வாசகம்,

[இப்பன்னிரண்டு நூல்களும் "விண்ணுலகத்தின் உயிராகப் பன்னிரண்டு இராசிகள் இருப்பது போல்; மண்ணுலக இயக்கத்துக்கு உயிராக இருக்கும் பன்னிரண்டு 'இராசிவட்ட நூல்கள்', 'இராசி நிலை நூல்கள்', 'இந்துமதப் பன்னிரண்டு' ..." என்று சிறப்பிக்கப் படுகின்றன.]

13. சுருதிகள், 14. சூத்திறங்கள், 15. சூத்திரங்கள், 16. சூத்தரங்கள், 17. குருமார் ஒழுக்கம், ['குருமார் ஒழுகலாறு' என்று இந்நூலின் பெயருக்குப் பாட வேறுபாடு உண்டு] 18. பூசாவிதிகள்.

**இந்துமதம் தழைத்தோங்க அனைவரும் அ.வி.தி. நிகழ்ச்சிகளில் முழங்க வேண்டிய அருளுலக முழக்கங்கள்**:-

1. **சித்தர் நெறியால்தான்** தமிழ் வாழும், வளரும், வளமுறும், வலிமை பெறும், பொலிவடையும்.

2. **தமிழால்தான்** இந்துமதம் வடிவப்படும், வாழும், வளரும், வளமுறும், வலிமை பெறும், பொலிவடையும், பயன் நல்கும்.

3. **இந்துமதத்தால்தான்** இந்தியாவே வாழும், வளரும், வளமுறும், வலிமை பெறும், பொலிவடையும், வடிவப்படும்.

4. **இந்துமதத்தால்தான்** மனிதத்துவம் வாழும், வளரும், வளமுறும், வலிமை பெறும், பொலிவடையும்.

5. **இந்துமதத்தால்தான்** உலக உயிர் ஆவி ஆன்மா ஒற்றுமையும், ஒருமைப்பாடும், பற்றும், பாசமும், சமத்துவமும், பொதுவுடமையும் வாழும், வளரும், வளமுறும், வலிமை பெறும், பொலிவடையும், பிறவிப் பயனைத் துய்க்கும்.

6. **இந்துமதத்தால்தான்** பிண்டத்துள் அண்ட பேரண்டங்களை இணைத்து உணர்ந்து உய்வுறல் நிகழும்.

7. **இந்துமதத்தால்தான்** நலிவுகள் நலிவடையும்.
**இந்துமதத்தால்தான்** மெலிவுகள் மெலிவடையும்.
**இந்துமதத்தால்தான்** இழிவுகள் இழிவடையும்.
**இந்துமதத்தால்தான்** பழிகள் பழியடையும்.
**இந்துமதத்தால்தான்** மயக்கங்கள் மயங்கும்.
**இந்துமதத்தால்தான்** கலக்கங்கள் கலங்கும்.
**இந்துமதத்தால்தான்** தயக்கங்கள் தயங்கும்.
**இந்துமதத்தால்தான்** தீயவை தீய்ந்திடும்.
**இந்துமதத்தால்தான்** மாயங்கள் மாய்ந்திடும்.

**இந்துமதத்தால்தான்** இல்லாமைகள் இல்லாமை பெற்றிடும்.
**இந்துமதத்தால்தான்** பொல்லாமைகள் பொல்லாமை பெற்றிடும்.
**இந்துமதத்தால்தான்** இயலாமைகள் இயலாமை பெற்றிடும்.
**இந்துமதத்தால்தான்** தேக்கங்கள் தேக்கங்களாகி விடும்.
**இந்துமதத்தால்தான்** ஏக்கங்கள் ஏக்கங்களாகி விடும்.

இவ்வேழும் ஏழு கடலலைகள் போல் என்றும் எங்கும் எழுந்து பேரொலி கிளப்பட்டும். அவ்வொலியே அனைவரையும் கிளர்ச்சியுற்று விழிச்சியும் பெற்றுச் செழுச்சிக்காக அயரா முயற்சிகளைச் செய்யச் செய்யும்...."

**- குருபாரம்பரியம்**
**காவிரியாற்றங்கரைக் கருவூரர்**

இக்குறிப்புக்களை இங்கு குறிப்பதன் மூலம் **'அருட்பணி விரிவாக்கத் திட்டம்'** என்ற ஓர் அமைப்பு மிகமிகத் தொன்மையானது, உண்மையானது, திண்மையானது, நன்மையானது என்ற பேருண்மைகள் விளக்கப் படுகின்றன.

"... கி.பி.1772இல் தோற்றுவிக்கப்பட்ட **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'** [இந்துமத மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிக்கப் படவில்லை] உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கவும்; உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கவும் ... தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

<u>இது ஓர் உலகம் தழுவிய அமைப்பு</u>. இதனுடைய கருத்து வீச்சால்தான், பத்தொன்பதாம் நூற்றுண்டில் கெக்கல் (Hegel), காரல் மார்க்சு (Karl Marx), ஏங்கல்சு (Engels), .... முதலிய பொதுவுடமைத் தத்துவச் சிந்தனையாளர்கள் தோன்றினர். ஆனால், **அருட்பணி விரிவாக்கத் திட்ட**த்தின் மூலம் உலகம் முழுவதும் மந்திரவாதிகளும், சூன்யக்காரர்களும், சோதிடர்களும், மதத்தால் வயிறு பிழைக்கும் சூழ்ச்சிக் காரர்களும் ... அதிகமாகி விட்டார்கள்.

இருப்பினும், **அருளுலக ஆர்வலர் கழகம்** தொடர்ந்து செயல்பட்டதால், டாக்டர் ஐன்சுடீனும் (Albert Einstein அணுக் கொள்கை கண்டவர்), திரு எம்.என். ராயும் (M.N.Roy உலகப் பொதுவுடமை இயக்கமும், பகுத்தறிவுக் கழகமும் அமைத்தவர்) பெரிதும் முயன்று **'உலக மத ஆய்வுக்குழு'** என்ற ஒன்றைத் தோற்றுவித்துப் பயனுள்ள சாதனைகளைச் சாதித்துள்ளனர்.

எனவே, இ.ம.இ.யின் இரண்டாவது பாரம்பரியத் தலைவர் என்ற முறையில் இன்றைய இந்தியாவின் நல்வாழ்வுக்காகவாவது; ஏழை, எளிய, பாட்டாளிப் பாமர மக்களைக் காப்பாற்றிடவாவது; ஆத்திகத்தின் சமுதாய நல விரோதப் போக்குகளையும், துரோகப் போக்குகளையும் தடுக்கவாவது இ.ம.இ., அ.வி.தி., அ.ஆ.க. என்ற மூன்றும் விரிவாக வளர்ந்து, விரைவாகச் செயல்பட வேண்டும் என்ற கருத்தையே இ.ம.இ.யின் மூன்றுவது பாரம்பரியத் தலைவருக்கு வழங்குகிறேன்...”

**- சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை,**
**காக்கா வழியன் பண்ணையாடி,**
**இ.ம.இ.யின் இரண்டாவது பாரம்பரியத் தலைவர்.**

இப்படிச் சில தனிக் குறிப்புகளையே எமது **அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்நிலை விளக்கம்** என்ற நூலுக்கு முன்னுரையாக வழங்குகிறோம் யாம்.

**இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,**
**இராசிவட்ட நிறைவுடையார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 2.//**

# <u>பதினெண்சித்தர்களின் பார்வையில் ....</u>

# <u>பெரியாரும் - சங்கரரும்</u>

... **“இந்து மதம் சங்கராச்சாரியாரின் சாதனையா?”** என்ற வினாவெழுப்பி விடை கூறி விளக்கிட வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டு விட்டது. ஏனெனில், தமிழகத்தைத் தட்டியெழுப்பி, அதன் நன்மைக்காகத் தன்மானத்திற்காகத் தன் வாழ்நாள் முழுவதும் தளராமலும், தயங்காமலும் தொடர்ந்து தொண்டாற்றிய <u>தமிழர் தலைவர், தந்தை பெரியார் ஈ.வே.ரா.</u> அவர்களை விமர்சிக்க வேண்டிய அவசியம் நமக்குண்டு.

பைந்தமிழ் நாட்டில் தோன்றிய பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் ஈ.வே.ரா. இவர் பைந்தமிழ் நாட்டின் சிறுமைகளையெல்லாம் அகற்றிடப் புறப்பட்டிட்ட சீர்திருத்தச் சிங்கம். இவர் சனாதன சமயக் கொடுமைகளையும், மடமைகளையும், மூடத்தனங்களையும் எதிர்த்துப் போராடிய மாவீரர். இவர், சமுதாயம், சமயம், கலை, இலக்கியம், தொழில், அரசியல், மொழி ... முதலிய எல்லாத் துறைகளிலுமே தனது கருத்தைத் துணிவாக வெளியிட்டும், செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்டும் வாழ்ந்த அஞ்சா நெஞ்சம் பெற்ற இரும்பு மனிதர். இவர் உருவாக்கிய தொண்டர்கள் இல்லாத துறையே இல்லையென்ற செயலாக்கச் சிந்தனைச் சிற்பி.

இப்படிப்பட்ட இவர் வரலாற்றையும், சமயத்தையும், இலக்கியத்தையும் முறையாகக் கற்ற வல்லுநர்களைத் துணையாக ஏற்றுச் செயல்படாமல் போனது ஒரு மாபெரும் சாபக்கேடு! ஈடு செய்ய முடியாத இழப்பு! இவர் தன்னிச்சையாகவும், பிடிவாதமாகவும் செயல்பட்டிடாமல் இருந்திருந்தால்; தமிழினத்தின் எல்லா நலிவுகளும், இழிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டிருக்கும். ஆனால், அது

நிகழாமல் போனதாலேயே இன்றைக்கும் தொடர்ந்து தமிழினத்தின் சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் துறைகளில் எல்லாம் சீர்திருத்தப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டியிருக்கிறது.

இவர், ஆரியர்களால் தமிழர்கள் அடிமைகளாக்கப் படுவதையும், சுரண்டப் படுவதையும் கடுமையாகக் கண்டித்தார். அதற்காகவே ஆரியர்களின் வேதங்களையும், இதிகாசங்களையும், புராணங்களையும், சாத்திரச் சம்பிரதாயங்களையும், சடங்குகளையும், மத நம்பிக்கைகளையும் கடுமையாகக் கண்டித்தார்; மிகமிகக் கொடூரமாகத் தாக்கினார். அதன் விளைவாகத்தான் தமிழர்கள் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, இன உணர்வு, மொழி உணர்வு, நாட்டு உணர்வு, சமுதாயப் பற்று ... ... முதலியவைகளைப் பெற்றிட்டார்கள்.

இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாகப் பலகோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், சமய மரியாதைகளையும் பெற்று வாழும் ‘தமிழினச் சமயத் தலைவர்கள்’, ‘சைவச் சித்தாந்த மடங்கள்’, ‘சைவச் சித்தாந்த திருச்சபைகள்’, ‘சைவச் சித்தாந்த ஆதீனங்கள்’, ‘சைவச் சித்தாந்த பீடாதிபதிகள்’ ... என்று கூறிக் கொண்டு சுகபோகமாக வாழ்ந்து வருகின்றுர்களே தவிரத்; தந்தை பெரியார் ஈ.வே.ரா. போல் ஆரிய மாயைகளை, ஆரிய மொழி ஆதிக்கத்தை, ஆரியச் சமயச் சர்வாதிகாரத்தை, ஆரிய ஏமாற்றுக்களை, ஆரியச் சுரண்டல்களைத் தாக்கித் தகர்த்துத் தமிழின விழிச்சிக்கும், எழுச்சிக்கும், செழுச்சிக்கும் பாடுபடவே இல்லை.

எனவேதான், நாம், தந்தை பெரியார் நாத்திகவாதியல்ல, அவரே உண்மையான சிறந்த ஆத்திகவாதி; தந்தை பெரியாரால்தான் சமய உணர்வு தழைத்தது; பாழடைந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன; சைவ வைணவச் சண்டை அடங்கியது; கோயில்களுக்குச் செல்பவர்கள் அதிகமானுர்கள். சமய-இலக்கிய அறிவு வளர்ந்தது. பாசிபிடித்த திருக்குளங்கள் சுத்தம் செய்யப்பட்டு பளிங்கு நீரைப் பெற்றன. சமயச் சடங்குகளும், திருவிழாக்களும் மிகுந்த ஆர்வத்துடனும், முறையோடும் பெரிய அளவில் கொண்டாடப்படலாயின. மதத்

தலைவர்களுக்கும், பத்தர்களுக்கும், சமயப் புலவர்களுக்கும் மதிப்பு ஏற்பட்டிட்டது.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் தந்தை பெரியாரை அறுபத்திநான்காவது நாயனாராக அறிவிக்க நேரிட்டது. இந்த இருபதாம் நூற்றண்டில் எந்தச் சமயாச்சாரியாரும், பீடாதிபதியும், மடாதிபதியும், ஆதீனமும், பத்தரும் ... படிக்காத அளவு, படிக்க முடியாத அளவு சமயச் சாத்திறங்களையும், புராண இதிகாசங்களையும் படித்துக் கொண்டே இருந்தவர் தந்தை பெரியார் ஈ.வே.ரா. ஒருவர்தான். இவர்தாம் அன்றுடம் தம் எழுத்திலும், உரையாடலிலும், சொற்பொழிவிலும் ... கடவுள்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டே இருந்தவர். “நாமாவளி சொன்னாலே போதும்! எல்லாவிதமான பூசைகளையும், தவங்களையும், யாகங்களையும் செய்த புண்ணியம் கிடைக்கும்” என்ற சமயப் பேருண்மையின்படி பெரியார் ஈ.வே.ரா.தான் சிறந்த புண்ணியவான். இவருக்கு சொர்க்கமே கிடைத்திருக்கும். இவரே கடவுளின் அளப்பரிய அன்புக்கு உரியவராகின்றார்.

இவற்றின்படிப் பார்த்தால் **கடவுளைச் சொல்லால் அடித்துப் பூசை செய்த “சொல்லடி நாயனார்”** என்ற சிறப்புக்குரியவராக இவரை அறிவிப்பது சரியே! ஏற்கனேவே, கடவுளைக் கல்லால் அடித்துப் பூசை செய்த சாக்கிய நாயனார் **“கல்லடி நாயனார்”** என்று அறுபத்துமூவர் வரிசையில் உள்ளார். எனவே, இவர் அறுபத்துநான்காவது நாயனாராக அறிவிக்கப்படுவது சமய மறுமலர்ச்சிக்கும், சமுதாயச் சீர்திருத்தத்துக்கும், தமிழின நல்வாழ்வுக்கும், இந்தியச் சிந்தனைக்கும் துணையாக இருந்திடும். அதற்காக நாம் **‘பெரியார் ஈ.வே.ரா. நாத்திகரல்ல; அவர் ஓர் ஆத்திகரே’** என்ற கருத்தை வலியுறுத்தியே ஆக வேண்டும்.

இவர் முறையான, முழுமையான வரலாற்றுச் சிந்தனைகளைப் பெற்றிடாத காரணத்தால்; ஆரியர் மீதிருந்த வெறுப்பைச் சங்கராச்சாரியார் மீதும், வேதங்கள் மீதும் திருப்பினார். அது, இந்துமத மறுப்பாக, வெறுப்பாக, எதிர்ப்பாக உருவெடுத்தது. ஆனால்,

இந்துமதம் சங்கராச்சாரியாரின் சாதனையல்ல; சங்கருக்குப் பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதம் தோன்றிவிட்டது. இந்துமதத்தில் நலிவும், தளர்ச்சியும் ஏற்படும் போதெல்லாம்; அருளாளர்கள் தோன்றி இந்துமதத்தை வலிமைப் படுத்தி, வளர்ச்சி பெறச் செய்திருக்கின்றுர்கள்.

அப்படி இந்துமதத்தைக் காலங்கள் தோறும் காத்திட்ட அருளாளர்களின் பட்டியலில் இடம் பெறுகின்றவரே சங்கராச்சாரியார். இவர் ஏற்கனவே இருந்த வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் பொருள் விரித்துரைத்து; தனது அறிவாலும், அருளாலும் இந்தியா முழுவதும் தனித்தனியாக வளர்ந்திருந்த வழிபாடுகளையெல்லாம் ஒருங்கிணைத்து; இந்துமதம் என்ற நிறுவன ஒழுங்கமைப்பை உண்டாக்கினுர். இந்த ஒழுங்கமைப்பை மிகப்பெரிய அளவில் நிர்வாகம் செய்ய மடங்களெனும் நிர்வாக ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியது உண்மையிலேயே மிகப்பெரிய சாதனையாகும்; அரிய சாதனையுமாகும். இச்சாதனையே இந்துமதத்தை வேறுபாடுகளுக்கிடையில் ஒற்றுமையுடைய ஒன்ருக ஆக்குகின்றது.

அதாவது, இந்துமத நடைமுறைகளிலும், நம்பிக்கைகளிலும் எண்ணற்ற சிறுசிறு வேறுபாடுகள் இருந்த போதிலும்; இந்துமதம் வண்ண வண்ண மலர்கள் பூத்த சோலையாக; பல வடிவுடைய, வகைமிக்க சுவையூறு காய்கனிகள் பூத்துக் குலுங்கும் சோலையாக; வடிவமைப்புடைய வாழ்வு பெறச் செய்த ஒரு மாபெரும் முயற்சியை அழகுற நிறைவேற்றியவர் சங்கராச்சாரியாரே. எனவே, இந்துமதம் சங்கருடைய சாதனை இல்லை என்ற போதிலும்; இந்தியா முழுவதும் இந்துமதம் என்ற வடிவமைப்பு வாழ்வும், வளர்ச்சியும், வலிவும், பொலிவும் ஏற்படச் செய்தது சங்கரரின் சாதனையேயாகும். இதற்கு இந்துக்களனைவரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

அதே நேரத்து, இவரால் சமசுக்கிருத மொழியாதிக்கமும், பார்ப்பனச் சமுதாய ஆதிக்கமும், சைவச் சித்தாந்த முறை நலிவுறலும், தமிழ் மொழியின் சமயச் செல்வாக்கு அழிவுறலும், சித்தர் நெறியின்

ஆயகலைகள், அருட்கலைகள், சாத்திறங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்தரங்கள், சூத்தரங்கள் ... திருவாசகங்கள், தேவாரங்கள், பாசுரங்கள், ... கும்மிகள், கண்ணிகள் ... முதலியவை செல்வாக்கிழந்து பயன்படாமல் போனமையும் நிகழ்ந்திட்டன.

மேலே குறித்த சங்கராச்சாரியாரான ஆதிசங்கராச்சாரியாரின் செயல்களால் ஏற்பட்ட இழப்புக்களையெல்லாம் ஈடுசெய்யத்தான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் (கி.பி.785 - கி.பி.1040) அவர்கள் மாபெரும் முயற்சிகளைச் செய்தார். அதன் பயனாகப் பிற்காலச் சோழப் பேரரசு (கி.பி.785 - கி.பி.1279) உருவாயிற்று. இது சித்தர்களின் ‘சித்தர் நெறி’ என்னும் ‘சைவ சமயம்’, ‘சைவ சித்தாந்தம்’, ‘சிவ மதம்’ *[இவர் காலத்தில் ‘வைணவம்’ எனும் தனி மதப்பிரிவு ஏற்படவேயில்லை. கி.பி.1137க்குப் பிறகுதான், ‘உடையவர்’ எனப்படும் அருள்மிகு எம்பிரான் எம்பெருமான் திரு இராமானுஞ்சாச்சாரியாருக்குப் பிறகே ‘வைணவம்’ தனி மதப் பிரிவாக வளர்ந்தது. இது கருவூர்த்தேவர்க்குப் பிறகு (கி.பி.1182) மிகச் சிறப்பாக வடிவமைப்புப் பெற்று வளர்ந்தது.]* எனும் இந்துமதம் தமிழ்மொழியின் அடிப்படையில் மறுமலர்ச்சி பெற்றிடச் செய்தது. அதனால், தமிழ்மொழியின் ஆற்றலின் மூலம் எண்ணற்ற அருளாளர்கள், சித்தியாளர்கள், அடிகளார்கள், அருட்குரிசில்கள், அருட்தோன்றல்கள், அருள்வள்ளல்கள் ... தோன்றிட்டார்கள்.

மேலே கண்ட உண்மைகள் பகுத்தறிவுப் பகலவன் ஈ.வே.ரா. பெரியாரின் சீர்திருத்தப் போக்கு சித்தர்களின் சீர்திருத்தப் போக்கினை ஒட்டி இருப்பதாலும்; ஆதிசங்கரரின் இந்துமத வளர்ப்பு பதினெண் சித்தர்களின் மத மறுமலர்ச்சிப் பணியுடன் ஒத்திருப்பதாலும் **இவர்களும் சித்தர்களே!** ........

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 2.//**

# சிந்திக்க வாருங்கள்...

**[ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் எழுதிய 'இளைஞர்களுக்கு' என்ற நூலில் ஒரு பகுதி கீழே தரப் பட்டுள்ளது.]**

...தமிழகம் ஒன்றுபடுவதற்கு மட்டுமல்ல; **இந்தியாவே ஒன்றுபடுவதற்கு இந்துமதம்தான் சிறந்த சாதனம்**! உரிய வழி! இந்துமதத்தை மறப்பவரும், துறப்பவரும், வெறுப்பவரும், மறுப்பவரும், மதியாதவரும், விரும்பாதவரும், முழுமையாக நம்பாதவரும், வேடதாரியாக ஆதரிப்பவரும், கூலிக்காக ஆதரிப்பவரும், போலியாக ஆதரிப்பவரும், வேலியாக ஆதரிப்பவரும், ... மிகுதியாக இந்தியச் சமுதாயவாதிகளாகவும் (Social workers & Reformers), அரசியல்வாதிகளாகவும் (Politicians) வாழுகிறார்கள். அதனால், இந்தியர்கள் ஒற்றுமையின்றி எல்லாவித நோய் நிலைகளுக்கும், பேய் நிலைகளுக்கும், வறுமை நிலைகளுக்கும், வேற்றுமை நிலைகளுக்கும் உள்ளாகி இழிநிலையில் வாழுகிறார்கள்.

இவற்றையெல்லாம் உடனடியாகத் தடுக்கவும், முழுமையாக அகற்றவும் கூடிய வீரமும், தீரமும், தரமும், தியாகமும்... உடைய தலைவர்களை இந்துமதத்தால்தான் ஈன்று தர முடியும். இந்துமதத்தின் தத்துவங்களால்தான் இன்று வரை நீடிக்கும் அனைத்து இழிநிலைகளையும், பழிநிலைகளையும், அழிநிலைகளையும் அகற்ற முடியும்.

இன்றுள்ள கல்வியால் 'மொழிப் பற்று', 'இனப் பற்று', 'நாட்டுப் பற்று', 'குடும்பப் பற்று', 'சமுதாயப் பற்று', 'பண்பாட்டுப் பற்று', 'பொதுநலப் பற்று', 'சமாதானப் பற்று', 'அமைதிவழிச் செயலில் பற்று', 'அன்புவழிச் செயலில் பற்று' ... முதலியவைகளை உருவாக்கவே முடியவில்லை. ஆனால், தன்னலவெறியும், அகம்பாவ வெறியும்,

ஆணவ வெறியும், வன்முறைச் செயல் வெறியும், ஒற்றுமையின்மையும், துரோக உணர்வும், விரோத உணர்வும் ... வளர்க்கப் படுகின்றன. எனவே, இன்றைய கல்வியை நம்பாமல் மதவழிக் கல்வியைப் பெற்று மனிதாபிமானத்தோடு, தன்னலமின்றித், தன்னம்பிக்கையோடு, **பொதுநலத்துக்காக உழைக்கக் கூடிய இளைஞர்களை** உருவாக்கிட இளைஞர்கள் தேவை.

பம்பாயில் சிவசேனை இயக்கம் தமிழர்களைச் சித்திரவதை செய்து தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையிட்டபோது தடுக்காத இந்திய அரசுதான்; இப்போது இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதையும், கோடிக்கணக்கில் தமிழர் சொத்துக்கள் கொள்ளையடிக்கப் படுவதையும் தடுக்காமல் இருக்கிறது.

இதற்குக் காரணம் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள்தான். இவர்கள் பணம், பதவி, புகழ்... முதலியவற்றிற்காக அனைத்தையும் காட்டிக் கொடுத்தும், அடிமைப் படுத்தியும், தன்மானங் கெட்டுத் தன்னலவெறி கொண்டு செயல்படுகிறார்கள். இவர்களைத் திருத்துவது இயலவே இயலாது. இவர்கள் சுவை கண்ட பூனைகள். இவர்கள் அடிமைகளாக, காவடிகளாக, கூசாக்களாக, எடுபிடிகளாக, கங்காணிகளாக, தொண்டர்களாக, கூலிகளாக ... வாழ்ந்தே பழகிப் போனவர்கள். எனவே, உடனடியாக இவர்களைத் திருத்த முற்பட்டு வன்முறைச் செயல்கள் தலை விரித்தாடச் செய்ய வேண்டாம்.

இவர்களே, தமிழகத்தை இலங்கையாக, அசாம் மாநிலமாக, பஞ்சாப் மாநிலமாக, பங்களாதேசமாகப் ... படுகொலைகளுக்கு உரிய நாடாக்கிடுவர். பலகோடிப் பணச் செலவில் பாரத நாட்டு இராணுவம் பசித்த புலியாக இருக்கிறது. அதன் கடுமைக்கும், கொடுமைக்கும் தமிழ்நாடு பலியாகி விடக் கூடாது. எனவே, அமைதி வழியில், அன்பு வழியில், அற வழியில், சமாதான

வழியில், அண்ணல் மகாத்மா வழியில் இந்துக்களின் மறுமலர்ச்சி மூலம் நாட்டை ஒற்றுமைப் படுத்துவோம்.

இன்று ஏடுகளும், நாட்டு மக்களும் இந்துமதத்தைத் தெரிய, அறிய, புரிய... விரும்பினாலும் அதற்குரிய வரலாறுகளும், இலக்கியங்களும், சாத்திரச் சம்பிரதாயங்களும், சடங்குகளும், விரதங்களும்... உண்மையான நிலையில் கிடைக்கும் வசதி வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவாகவே இருக்கின்றன. இக்குறையைப் போக்க மடாதிபதிகளாலோ! பீடாதிபதிகளாலோ! இருபதுக்கும் மேற்பட்ட இந்துமத இயக்கங்களாலோ! பொதுநலத் தொண்டு புரியும் எண்ணற்ற இந்துமதத் திருச்சபைகளாலோ!... முடியவில்லை! முடியவில்லை!! முடியவில்லை!!! முடியவே இல்லை.

எனவேதான், இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இலைமறை காயாக இருந்து செயல்பட்டே; பதினெண்சித்தர்கள் பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன் **இளமுறியாக் கண்டத்து ஆதிமனிதர்களுக்குப் பைந்தமிழில் வழங்கிய இந்துமதத்தின் மூலம்** அருளாளர்களைத் தோற்றுவித்து; அருட்பயிர் விளைவித்து அனைத்துப் பசிகளையும், தாகங்களையும் அகற்றி வரும் **'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை'** அரசுப் பதிவு பெற்ற ஒரு பண்பாட்டுக் கழகமாக வெளிப்பட்டுச் செயல்படச் செய்ய நேரிட்டுள்ளது. இச்செயல் முழுமையான வெற்றி பெறுவது இன்றைய படிக்கின்ற, படித்த இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது.

அதாவது குடும்பம், பதவி, பணம் என்ற குறுகிய எல்லைக்குள் தங்களைச் சிறைபடுத்திக் கொள்ளாமல் 'இந்துமதம்', 'இந்துமதத்தின் தமிழ்மொழி', 'இந்துமதத்தின் மக்கள் வாழும் இந்தியா', 'இந்துமதத்தின் கருவறையாக, நாற்றங்காலாக, பிறந்தகமாக, பாசறையாக, உலைக்கலமாக, கலைக்கூடமாக இருந்திடுகின்ற தமிழ்நாடு - திராவிட

நாடு => தென்னிந்தியா', 'இன்று இந்துமதம் கோலோச்ச வேண்டிய பரந்த இந்திய நாட்டு மக்கள்' என்ற பரந்த எல்லைகளில் உலவிடவும், பணியாற்றிடவும் தயாராகிடல் வேண்டும். பல்வேறு மொழிவழி இனங்களுக்கும், மாநிலப் பிரிவுகளுக்கும் இரையாகி; வெறி கொண்டு, வேற்றுமைப்பட்டு, ஆதிக்கப் போரிலும், சுரண்டலிலும் ஈடுபட்டிருக்கும் பாமர மக்கள்நல விரோத, தீய சத்திகளிடமிருந்து பாரதத்தைப் பாதுகாக்க வேண்டும்.

"... இன்றைய கல்வி இந்துமதத்துக்கு மாறானதாக! வேறானதாக! அன்னியமானதாக! அதிகத் தொடர்பற்றதாக! ... இருக்கிறது. இதனால்தான், '<u>இந்துமதத்துக்குரிய இந்திய நாட்டின் மீது இந்துக்களுக்குப் பற்றில்லை! பாசமில்லை! விருப்பமில்லை! நம்பிக்கையில்லை! ஈடுபாடு இல்லை</u>'; அதாவது, இந்தியர்களாகிய இந்துக்கள் இந்திய அரசியல் விடுதலைக்குப் பிறகும் தொடர்ந்து அன்னியர்களால் மத விரோதமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டே ஆளப்படுகிறார்கள். இந்த இழிநிலையில், அவலநிலையில், கேவலநிலையில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப் பட்டேயாக வேண்டும்.

அதற்காகப் <u>படித்த இளைஞர்கள்</u> இந்துமத வரலாறுகளையும், தத்துவங்களையும், பிற இலக்கியங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்து அமைதிவழிப் போர்வீரர்களாக உருவாக வேண்டும். மேலும், இவர்கள் பூசை, தவம், வேள்வி, ... முதலியவைகளில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியின் முதிர்ச்சியால் <u>அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய வல்லவர்களாக இருக்க வேண்டும்</u>.

அப்பொழுதுதான் காலப்போக்காலும், தன்னலக்காரர்களின் சூழ்ச்சிகளாலும், வன்முறையாளர்களாலும் மதத்துள் ஏற்பட்டுவிட்ட அறியாமைகள், மடமைகள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், சர்வாதிகாரங்கள், இழிந்த மந்திரவாதிகளின் தொல்லைகள், மத

விரோதச் செயல்கள், சமுதாய நல துரோகச் செயல்கள்,... முதலியன அனைத்தையும் அகற்றி மதத் தூய்மையையும், வாய்மையையும் காக்கும் **அறிவார்ந்த அருட்பணி**யும் நிறைவேறும் இவர்களால். இவற்றால் இந்துமதம் இந்தியாவை ஆளுகின்ற நிலை விரைந்து உருவாகிடும்... ...” என்று காலஞ்சென்ற இ.ம.இ. தலைவர், அருள்மிகு சித்தர் காகபுசுண்டர் (காக்கையர்) ம. பழனிச்சாமி அவர்கள் கூறியதை இங்கே கூறி; இன்றைய படித்த, படிக்கின்ற இளைஞர்களை இந்துமத மறுமலர்ச்சிக்காக! வளவளர்ச்சிக்காக! அருளாட்சி முயற்சிக்காகத் தங்களால் இயன்ற அளவு [முடிந்தால் முழுநேர ஊழியராகவும்] தொண்டாற்ற வருமாறு அழைக்கிறோம்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 2.//**

1. இந்துமதம் வளர்ப்போம்! இந்தியாவைக் காப்போம்!
2. இந்துமதமே இந்தியர்களை ஒற்றுமைப் படுத்தும்!
3. இந்துமதமே மொழி உரிமை, இன உரிமை வளர்க்கும்!
4. இந்துமத விழிச்சியே தனிமனித எழுச்சி! சமுதாயச் செழுச்சி!
5. இந்துமத விடுதலையே கெடுதளைகளைத் தடுக்கும்!
6. இந்துமத ஆட்சி கயவர் சூழ்ச்சிகளை வீழ்ச்சி பெறச் செய்யும்!
7. இந்துமத ஞானமே அனைத்து விஞ்ஞானங்களுக்கும் தாய்!
8. இந்துமதமே சமத்துவச் சமுதாயம் உருவாக்க முடியும்!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 5.//**

# “இ.ம.இ. ஒரு பண்பாட்டு இயக்கமே!”

## இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளரின்

# வணக்கவுரை

**[1984இல் வெளியாகிய முதல் ‘குருதேவர் அறிக்கை’க்கு இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர் எழுதியது.]**

**பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகுக்கு வழங்கிய வாழ்வியல் நெறிகள், அருட்துறை முறைகள், கலை வடிவங்கள், இலக்கியத் தொகுப்புக்கள், அறிவியல் முடிவுகள், ஆராய்ச்சி உண்மைகள்...... இவைகள் நேரடியாக மக்களைச் சென்றடைவதின் மூலமே சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் உருவாக்க முடியும்.** பதினெண்சித்தர்களின் சமுதாயக் கொள்கைகளும், பொருளாதாரச் சிந்தனைகளும், அருளுலகப் பயிற்சிகளும் மீண்டும் மனித சமுதாயத்தில் கற்பிக்கப் படுவதின் மூலம்தான் இந்திய மக்களின் - உலக மக்களின் அமைதியற்றப் போக்குக்கு, ஆர்வமற்ற வறட்டு வாழ்க்கைக்கு வளமூட்ட முடியும்.

தெய்வீக உண்மைகளை உட்கொண்ட ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’; சித்தர்களின் விந்து வழி வாரிசான ‘சித்தர் கருவூரார்’ வழி வந்த சித்தர் ஏளனம்பட்டியாரால் கி.பி.1772இல் சிறு அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு இலைமறை காயாகவே வளர்ந்து வந்ததால்; இ.ம.இ.யின் நேரடியான சமத்துவ நன்மைகளை எல்லோரும் பெறும் வாய்ப்பினை இழந்தனர். எனவேதான், குருதேவர் தம் காலத்தில் உலகியலுக்கேற்ப பொதுமைப் படுத்த விரும்பி இதனை இயக்கமாக மாற்றினார். இதன் மூலம் மனித சமுதாய மறுமலர்ச்சிக்கு

வித்திட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அரசுப் பதிவுக்கு உரியதாக்கினார்.

நமது இயக்கம் மனித சமுதாயம் இழந்து போன பண்பாட்டினை மீட்டுத் தரும் ஓர் இயக்கம்; முழுக்க முழுக்கப் பண்பாட்டு இயக்கம். நமது நோக்கம்; தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு உரிமையோடும், பெருமையோடும் செழிக்கப் பாடுபடுவதோடு; இந்தியாவின் மற்றைய இனங்களும், மொழிகளும், நாடுகளும் தத்தம் அளவில் தன்னுரிமையோடும், பெருமையோடும் செழிக்க வேண்டும் என்பதேயாகும். இது இ.ம.இ.யின் தேசியக் கொள்கை! அது மட்டுமல்ல; இ.ம.இ. வெறும் இந்துமதத்துக்கு மட்டும் உரிய ஒன்றல்ல! **இந்து என்ற சொல் ஆத்திக மனம் படைத்த அனைத்து மனிதர்களையும் குறிக்கும் சொல்லாகும்**. (இந்து, இந்தியம், ஆத்திகன், பத்தன்... எனும் 48 வகைப் பொருள்படும்). எனவே, உலக முதல் மதமான இந்துமதத்துக்கு மற்றைய மதங்கள் விரோதிகளோ, எதிரிகளோ **அல்ல**. இந்த உண்மையை அனைவரும் புரிந்து, உணர்ந்து இ.ம.இ.யின் செயல் திட்டங்களை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்.

நமது இயக்கம் இந்தியாவிலுள்ள எண்ணற்ற அமைப்புகள், மன்றங்கள், கட்சிகள், சங்கங்கள் ... இவற்றிற்கிடையில் தனது நீண்ட நெடிய பயணத்தைத் துவக்கியுள்ளது. ஆனால், இதனுடைய கொள்கைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டு ஏற்கனவே உலகெங்கும் செயல்படுத்தப்பட்டு மீண்டும் இம்மக்களிடையே செயல்படுத்தப்பட உள்ளன. இதனுடைய கொள்கைகள் ஆக்கப் பூர்வமானவை! உண்மையானவை! நன்மையானவை! எல்லோராலும் விரும்பி ஏற்கப் படக் கூடியவை! அனைவராலும் ஆதரிக்கப் படக் கூடியவை! அன்றாட நடைமுறை வாழ்க்கைக்கு பயன் நல்கக் கூடியவை!

இவ்வியக்கம், தான்தோன்றித் தனமாகவோ, வறட்டுப் பிடிவாதமாகவோ, சர்வாதிகாரமாகவோ செயல்படாது! செயல்படாது!!

செயல்படாது!!! செயல்படவே செயல்படாது! காலத்துக்கேற்ற முறையில், மாறி வரும் அறிவியல் உண்மைகளுக்கு ஏற்ற முறையில் உண்மைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு, ஒப்புக் கொண்டு தன்னைத் திருத்திக் கொள்ளும் மனப்பாங்கு உள்ளது. ஏனெனில், மார்க்சீய சிந்தனையாளனால், மாபெரும் அனுபவவாதியால் தயாரிக்கப்பட்ட நமது குருதேவர் தமது வாழ்க்கையையே 'தெய்வீகச் சோதனை'யாக்கி (The test of Divinity) வாழ்ந்து வருவதால்தான் இப்போக்கினை நமது இயக்கம் கொண்டுள்ளது.

அல்லும் பகலும் இந்திய சமுதாய மறுமலர்ச்சிக்காக அவரின் ஓயாத சிந்தனைகள் எழுத்தாகி, கட்டுரையாகி, அச்சுக் கோர்க்கப் படாமல் கோப்புகளில் (Files) முடங்கிக் கிடக்கின்றன. இவ்வுலகைப் பற்றிய அரிய வரலாற்று உண்மைகள், தமிழ் இலக்கிய வரலாறுகள், அருட்துறை உண்மைகள்... போன்ற எண்ணற்ற வரலாற்றுப் பேருண்மைகள் வெளி வராமலேயே இருட்டறைக்குள் பூட்டிய செல்வமாகவே உள்ளன. அது மட்டுமல்லாது நமது குருதேவர் தனது வாழ்க்கையில் அடைந்த அருளுலக, அறிவுலக அநுபவங்கள் ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!! இவைகள் எல்லாம் அச்சாகி மனித சமுதாயத்தில் உலவி வந்தால் அடையப் போகும் 'மறுமலர்ச்சி'தான் ஒரு நீடித்த, தன்மானமுள்ள உரிமைகள் பெற்ற சமுதாயத்தை நல்கும்.

இதன் முதல் வடிவாகத்தான் ஆங்காங்கே பெரும்பாலும் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அருட்கலைகளில் தேர்ச்சியுற வைத்து அருட்பணிகளை ஆற்ற வைத்து வருகின்றார் நமது குருதேவர். அதற்காகத் தாராளமாக 48 வகைப்பட்ட அருட்பட்டங்களில் அவரவர்க்குரிய பட்டங்களை வழங்கி அருளாளர்களாக்கி (Divine Recognition); அவர்கள் மூலம் எண்ணற்ற மக்களுக்கு அறிவியலால் தீர்க்க முடியாத வாழ்வியல் சிக்கல்களைத் தீர்த்து வைத்து வருகின்றார். அதற்காக ஆங்காங்கே அருளாளர்களின் தலைமையில் அருள் நிலையங்களை அமைத்துள்ளார். மேலும் பட்டிதொட்டிகளில் எல்லாம்

இப்பணி பரவிட அனைத்து அருளாளர்களும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

இவ்வியக்கத்தின் மாபெரும் பிரிவாகத்தான், அடிப்படைக் கால்கோளாகத்தான் '**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**' எனும் அருட்துறை செயல்படுகின்றது. ஆங்காங்கே பயிற்சி பெற்ற அடியான்கள் மூலம் பொது இடங்களில் யாகம் வளர்த்து, வேள்விகள் நடத்தி, அருளை அநுபவப் பொருளாக மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்துமதத் தத்துவங்கள், செயல்பாடுகள், முறைகள் யாவும் படிப்படியாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழில் உள்ள அருட்கலைகள் யாவும் முறையானவர்களுக்கும், முழுமையானவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

ஆங்காங்கே அருட் கோட்டங்கள், வெட்டவெளிக் கருவறைகள், சத்தி பீடங்கள், நவக்கிரக (ஒன்பது கோள்கள்) பரிகார யாக மேடைகள், சுடலைப் பூசைகள்.... மத வேறுபாடின்றித் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் மதத் துறையால் வளர்க்கப்பட்டு வரும் போலி மரபுகள், தேவையற்ற சடங்குகள், ஆரவாரமான போக்குகள், வீணான முறைகள்.... யாவும் தூக்கியெறியப் பட்டு நேரிய முறையில், நிறைவான முறையில் சித்தர் நெறி உண்மைகள் மக்களை அடைய வழிவகை செய்யப் படுகின்றன.

♦ **சித்தர் நெறி வளர்வதன் மூலம்**தான் உண்மையான தனிமனிதர் செம்மை, குடும்ப வடிவமைப்பின் வளம், சமுதாய அமைப்பில் நன்மை தரும் பொலிவு நிகழ இயலும்.

♦ **இந்நெறி பரவுவதன் மூலம்**தான் தமிழக மக்களிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் செழித்தோங்கும்.

♦ **சித்தர் நெறி செழித்தோங்குவதின் மூலம்**தான் மொழியின், இனத்தின் பெயரால் வளர்க்கப்பட்டு வரும் சர்வாதிகாரத்தை, சுரண்டலை, ஏமாற்றுக்களை, அறியாமைகளை, அவலங்களை, உரிமையற்ற நிலைகளை, குறுகிய வெறிகளை நீக்க இயலும்.

♦ **சித்தர் நெறி மலர்ச்சியடைவதின் மூலம்**தான் ஆத்திக மனம் கொண்டோர் மதிக்கப்பட்டு சமுதாயத்தில் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு', 'ஏழையின் சிரிப்பில் இறைவன்' என்பவை உண்மைகளாகும்.

அதுமட்டுமல்ல; ஆரவாரத்திற்காகவும், புகழுக்காகவும், பதவிக்காகவும் பேசப்பட்டு வரும் 'புதுமைச் சமுதாயம்', 'புரட்சிச் சமுதாயமான பெண்களுக்கு சம உரிமை', 'கள்ளச் சந்தையை ஒழித்தல்', 'சுரண்டலை நீக்கல்', 'ஏழை பணக்காரனைப் போக்கல்', 'கல்வியைச் சீர்திருத்தல்', 'சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதிருத்தல்', 'தொழுநோயைப் போக்கல்', 'பிச்சைக்காரரை ஒழித்தல்', 'வேலையில்லாத் திண்டாட்டம் ஒழித்தல்' ... ... என்ற <u>எண்ணற்ற மறுமலர்ச்சிப் பணிகள் திட்டமிட்டபடி செயல்படுத்தி வெற்றி காணக் கூடிய தரம், திறம், உரம், வீரம், தீரம் மிக்க ஓர் அமைப்பு உண்மையிலேயே உண்டென்றால் அது நமது இயக்கம்தான்</u>.

இந்த உணர்வை இந்து மதத்தினர் அனைவரும் முதலில் பெற்றாக வேண்டும். ஏனெனில், நம்மை வழி நடத்திச் செல்பவர்கள் தாத்தாக்கள் ஆத்தாக்கள்தான். நாம் ஆண்டவன் பெயரால் செல்கின்றோம். எனவே, நமக்கு வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக ஆண்டவனைத்தான் அழைக்கின்றோம். எனவே, <u>நம்மவர்கள் சமயப்பணியே சமுதாயப் பணியாகக் கொண்டு செயல்பட வேண்டும்</u>.

நம் நோக்கம் மீச்சிறு நோக்கமல்ல; மாபெரும் நோக்கம். சிற்றோடையல்ல; பொங்கி வரும் புனலாறு. தீட்டப்பட்டப் பாதையல்ல; கற்களும் முட்களும் நிறைந்த பாதை; எனவே நாமனைவரும் குருதேவரின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொள்வோமானால்; ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும், நிர்வாகக் கட்டமைப்புடனும் செயலாற்றல் வேண்டும்.

இந்த நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பு இல்லாத காரணத்தினால்தான் இந்துமதம் பலத்த கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும், மடமைகளுக்கும்,

மூடநம்பிக்கைகளுக்கும், அறியாமைகளுக்கும், ஆடம்பரத்திற்கும், பொருளற்றச் சடங்குகளுக்கும், முதலாளித்துவத்துக்கும், சுரண்டலுக்கும் ... நலிந்து மெலிந்து உரிமையிழந்து வாழ வேண்டிய ஒன்றுக மாறி விட்டது. இந்த அழிநிலே, இழிநிலே, பழிநிலே, ஒழிநிலே விட்டகன்று மனித சமுதாயத்தை இந்துமதம் தலைமை தாங்கி இட்டுச் செல்லும், நடத்திச் செல்லும் தனித்தன்மையைப் பெற வேண்டுமானுல்; நம் போன்ற அருளாளர்களின் அயராத, ஓழியாத, தளராத, குன்றுத, ஆர்வம் மாறுத சித்தர் நெறி வளர்க்கும் மாபெரும் பணியால் மட்டுமே இயலும்.

மேற்கூறிய கருத்துக்களேயெல்லாம் உள்ளீடாகக் கொண்டுதான் மாற்று வடிவில் மதச் சீர்திருத்தம் செய்தார் பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், சிந்தனேச் சிற்பி, சீர்திருத்தவாதி பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள். இந்துமதம் வளர்க்கத் தவறிய சித்தர் நெறியின் தத்துவமான சமத்துவக் கொள்கையைத்தான் **நவநாத சித்தரான ‘காரல் மார்க்சு’** அவர்கள் கூறிச் செயல்படுத்திஞர். இவர்களால் முடித்து வைக்கப் படாத தத்துவங்களேச் செயலாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள இ.ம.இ.யின் அரிய முயற்சிதான் இவ்வறிக்கை!

இம்முயற்சி தலைமைப் பொறுப்பகத்தால் மதுரையில் நடைபெற்ற முதலாம் செயற்குழு மாநாட்டில் (25-12-83) கொண்டுவரப் பட்டத் தீர்மானங்களில் ஒன்ருன ‘இயக்கத்திற்கு வார ஏடு தேவை’ என்பதை உடனடியாக ஏற்றுக் கொள்ளப் பட்டதன் காரணமாக உருவானதாகும்; உடனே வெளிக் கொணரப் போதிய நிதி வசதியும், அரசுப் பதிவும் தேவையென்பதால் உடனே வெளி வரவில்லை. ஆயினும், நம்மவர்கள் இயக்க நிகழ்ச்சிகளே உடனுக்குடன் அறியும் வகையில் இந்த அறிக்கையை நண்பர்களின் பொருளுதவியின் மூலம் அச்சிட்டு வழங்குகின்ருேம்.

இதன்மூலம் இயக்க முறைகள், பூசை முறைகள், குருதேவரின் அருட்பணிகள், அருட்பயணங்கள், அ.வி.தி. நிலேயங்கள் ... ... இவற்றை அறிந்து கொள்ள இயலும். இவ்வறிக்கை மாதம் இருமுறை

வெளிவரும். பின்னர் இதற்கு சித்தரடியார் திருக்கூட்டங்களின் ஆர்வமும், ஒத்துழைப்பும் கண்டு வார இதழாக வெளிக் கொணர முயலுவோம்.

அச்சிட்ட இவ்வறிக்கையை வீணுக்காமல் அனைவரும் அனைத்து நண்பர்களிடமும், அன்பர்களிடமும், ஆதரவாளர்களிடமும், ஆர்வலர்களிடமும், விருப்பாளர்களிடமும், இருப்பாளர்களிடமும் அறிமுகப்படுத்தி ஆண்டுச் சந்தாவாக ரூ 12/- அல்லது ஆறுமாதச் சந்தாவாக ரூ 6/- திரட்டி தலைமையகத்திற்கு அனுப்பினுல் விரைவில் தேவையான நிதி வசதி பெற்று வார இதழாக வெளிவரும். குறைந்தது ஒருவர், இருபது நபர்களிடமிருந்து ஆண்டுச் சந்தாவைப் பெற்று அனுப்பிடல் வேண்டும். ஏற்கனவே குருதேவரின் கட்டுரைகளை, அஞ்சல்களை, உரைகளை **நகலெடுப்பதின் மூலம்** நாம் கருத்துப் புரட்சியைச் செய்து வருகின்றோம். இவ்வறிக்கையை அனைவரிடமும் தருவதே குருதேவரின் எண்ணச் சிறகுகளை நீலவானில் வெண்புறாக்களாகப் பறக்க விட்டதற்கு ஒப்பாக மாறிடும்.

தைத் திருநாளில் இ.ம.இ.யின் சார்பில் வெளிவரும் இவ்வறிக்கை தொடர்ந்து வெளிவந்து தமிழ் கூறும் நல்லுலகை வளமடையச் செய்யும்! வலிவடையச் செய்யும்! பொலிவுறச் செய்யும்! தமிழ் மொழிக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் தன்னம்பிக்கையையும், உரிமையையும், பெருமையையும், கட்டுக்கோப்பையும் மீட்டுத் தரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**இவண்**

**தலைமைப் பொறுப்பாளர்**

**(இ.ம.இ., அ.வி.தி.)**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 1.//**

# இராசி வட்டத் தீர்மானங்கள் (பன்னிரண்டு)

1. ஆத்திகர்கள்தான் நாடாள வேண்டும்.

2. இந்துமதம் இந்திய அரசின் மதமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

3. சிறுபான்மை மதத்துக்கென்று தனிப்பட்டச் சலுகைகள் தருவது போல் இந்துமதத்துக்கும் தர வேண்டும்.

4. இந்துக் கோயில்கள் அனைத்தும் காலை முதல் இரவு வரை அடைப்பின்றித் திறந்திருக்க வேண்டும்.

5. கோயில் சொத்துக்களுக்கு வரி விதித்தலோ, வழிபடு நிலையங்களுக்கு வரி விதித்தலோ கூடாது.

6. கோயில் வருமானங்களை மற்ற கோயில்களைப் புதுப்பிக்கவும், அன்றாடம் ஆறுகாலப் பூசைகளும், முறையாக அனைத்துத் திருவிழாக்களும் நிகழ்த்தத்தான் செலவிடல் வேண்டும். கலைஞர்களுக்குப் பொருள் வழங்குதல்; மதக் கலைகளைக் கற்பிக்கும் நிறுவனங்களை நடத்துதல் முதலியவற்றிற்கு மட்டுமே கோயில் வருமானங்களைச் செலவு செய்ய வேண்டும்.

7. இந்து அறநிலையத் துறையின் கீழாக உள்ள அனைத்துக் கோயில்களிலும் தமிழ் மந்திறங்களில் பயிற்சி பெற்ற பூசாறிகளையே நியமிக்க வேண்டும். இவர்களுடைய ஊதியத்தை இந்து அறநிலையத் துறையே ஏற்க வேண்டும்.

8. கோயில் நிர்வாகங்களில் ஆத்திகர்கள்தான் அதிகாரிகளாக இருக்க வேண்டும்.

8(அ). இந்துமதம் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பாக்கப் படல் வேண்டும். இதில் பட்டம் பெற்றவர்களே மதத்துறை அலுவலகங்களில் பணியாற்ற வேண்டும்.

9. இந்துமதக் கோயில்கள், இன்று சீக்கியர்களின் பொற்கோயில்கள் எப்படி அன்னியரோ!, மத்திய அரசோ! நுழைய முடியாத வலுவான கோட்டையாக இருக்கிறதோ அப்படி உருவாக்கப்படல் வேண்டும்.

10. உலகிலேயே சித்து விளையாடல் புரியும் அருளாளர்கள் இந்துமதத்தில்தான் நிறையப் பேர் எப்போதும் எங்கும் வாழ்கின்றனர். இவர்கள் ஒன்றுபடல் வேண்டும்.

11. இந்து மதத்தின் பெயரால் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒற்றுமைப்பட்டு, ஒன்றாகிச் செயல்படல் வேண்டும்.

11(அ). எந்த மதத்தோடும் வேற்றுமையோ, பகையோ, பொருமையோ, போட்டியோ, போராட்டமோ கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!

12. இந்துக்களை இந்துமதத்தைத் தெரிந்தும், புரிந்தும் வாழுமாறு செய்ய வேண்டும். இந்துக்களை இந்துமத அறிவு, நம்பிக்கை, பற்று, பாசம், மதிப்பு, பெருமை, உரிமை ... உணர்வுகளோடு வாழுமாறு செய்ய வேண்டும்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிடப் பட்ட குருதேவர் அறிக்கை எண் 1.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** அருளூறு அமுதத் தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** **தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு** எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

## கருவூரார்களால்தான் எதையும் படைக்க முடியும்.

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார். இவரே **'பிராமணச் சிசு கூடத் தமிழகத்தில் இருக்கக் கூடாது'** என்றும்; **'சமசுக்கிருத ஒலி கூட தமிழகத்தில் கேட்கக் கூடாது'** என்றும்; மிகமிகக் கடுமையான கொடுமையினை உருவாக்கி; முடிவில் இராசராச சோழனுக்கு சாபம் கொடுத்து அவன் தற்கொலை செய்து கொள்ளவும் காரணமாக இருந்திட்டார்.



இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com